Registered as a Newspaper

Now Available
All kinds of
VELONA PRODUCTS
[WHOLESALE]
★ Ba i ns
★ Ladies Vestes
★ Panties
Etc., Etc.
"ARTHE GROUP"
Contact:
ARTHE JEWELLERS
(Pvt.) Ltd.
111, Kasturiar Road,
Jaffna.

# உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இப்பொழுது
விற்பனையாகின்றது
VELONA
தயாரிப்புகளை யாழ்நகரில்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
"ARTHE GROUP"
தொடர்புகொள்க:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(pvt) லிமிட்டெட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 11 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 30 (27 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 207

★ புலிகள் -- இந்திய அதிகாரிகள் பேச்சில் முட்டுக்கட்டை

# புதிய யோசனைகளை ஏற்க பிரபா இரு நிபந்தனைகள்

## 1. சர்வஜன வாக்கெடுப்பின்றி வடக்கு -- கிழக்கு இணைப்பு
## 2. ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்க முடியாது

புதுடில்லி, ஜூலை 26

இனப்பிரச்சினைக்கான புதிய யோசனைகளை ஏற்பதற்கு, புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இரண்டு நிபந்தனைகளை விதித்திருக்கிறார்.

✶ வடக்கு - கிழக்கு இணைப்பு சர்வஜன வாக்கெடுப்பு எதுவும் இன்றியே நிரந்தரமாக அமுல் செய்யப்பட வேண்டும்.

✶ ஒப்பந்தம் கைச்சாத்தான உடன் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற அம்சம் மாற்றப்பட வேண்டும். ஆயுதங்களை அப்படி ஒப்படைக்க முடியாது.

மேற்கண்ட இரண்டுமே பிரபா விதித்திருக்கும் நிபந்தனைகளாகும் என அறிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதியின் புதிய யோசனைகள் சம்பந்தமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் இடையில் நடந்துவரும் பேச்சுக்களில் பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பி. பி. சி.யின் புதுடில்லிச் செய்தியாளர் மைக்கல் கூல்றிஜ் நேற்றிரவு இது சம்பந்தமாக அறிவித்ததாவது:

இலங்கை ஜனாதிபதியின் யோசனைகளை ஏற்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இரண்டு தினங்களாக வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் புலிகள் தலைவர் பிரபாகரன் இரண்டு விஷயங்களில் உறுதியாக இருந்து வருகிறார்.

இது இந்திய அதிகாரிகளுக்குபெரும் சவாலாக அமைந்துள்ளது.

★ சர்வஜன வாக்கெடுப்பின்றி வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பூரணமாக நிரந்தரமாக இணைக்கப்படவேண்டும்.

★ உடன்பாடு கைச்சாத்திட்டவுடன் ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் திரு. பிரபாகரன் விடாப்பிடியாக வலியுறுத்தி வருகின்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



பிரபாகரன்

### பிரபா - ராஜீவ் சந்திப்பு இன்னும் இல்லை

புதுடில்லி, ஜூலை 27

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இன்னும் நான் சந்தித்துப் பேசவில்லை. எப்போது சந்தித்துப் பேசுவேன் என்பதைச் சொல்ல முடியாதுள்ளது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்று இரவு அறிவித்தது. (இ-எ)

## பிரபா - எம். ஜி. ஆர். 3மணி நேரம் சந்திப்பு

### ஆனால் நிபந்தனைகளை கைவிடமறுப்பு பேச்சுக்கள் இன்றும் தொடரும்

புதுடில்லி, ஜூலை 27

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் சுமார் 3 மணித்தியாலங்கள் பேச்சுக்கள் நடத்தினார்.

நிபந்தனைகளைக் கைவிடும்படி பிரபாகரனை முதலமைச்சர் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

ஆனால், பிரபாகரன் நிபந்தனைகளைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

இக்கட்டத்தில் பேச்சுக்கள் திங்கள் வரை (இன்று) ஒத்திப்போடப்பட்டன.

முதலமைச்சருடன் இந்தியத் தூதர் டிக்ஸிற்றும் பேச்சுக்களில்கலந்து கொண்டார்,

இதனால் பிரதமர் காந்தியின் கொழும்பு (4 ஆம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் புதனன்று வருவதற்கு முன்

## எதிர்ப்பு இயக்கம்

கொழும்பு, ஜூலை 27

பிரதமர் காந்தி புதன்கிழமை வருவதற்கு முன்னர் வடக்கு—கிழக்கு இணைப்புக்கு எதிரான இயக்கம் ஆரம்பிக்கப்படும்—

சுதந்திரக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த இயக்கத்துக்கு சிங்கள மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு உள்ளது என்றும் அப்பேச்சாளர் சொன்னார்.

இதனிடையில் கண்டி சென்று மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துப் பேச திருமதி பண்டாரநாயக்கா தீர்மானித்திருக்கிறார், இப்பேச்சுக்கள் நேற்று நடைபெறுவதாக இருந்தன.

இதே வேளை வடக்கு—கிழக்கு இணைப்புக்கு எதிரான இயக்கத்தைத் தலைமை வகித்து நடத்தும்படி தாய் நாட்டைப் பாதுகாக்கும் இயக்கம் அஸ்கிரிய பீடாதிபதியைக் கேட்டு உள்ளது. (இ-எ)

## கடைசிச் சந்தர்ப்பம் என்கிறார் றொனி

கொழும்பு, ஜூலை 27

இனப் பிரச்சினையைத் தீர்க்க இதுவே கடைசிச் சந்தர்ப்பம்.

இப்படிச் சொன்னார், நிதி அமைச்சர் றொனி டி மெல்.

அகலவத்தையில் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கௌரவத்துடன் ஏற்படும் இச்சமாதானத் தீர்வைத் தடுப்பவர்கள் நாடு பிளவுபடுவதற்கும் நாட்டின் இறைமை பறிபோவதற்கும் உதவுபவர்களாகவே கருதப்படுவர்.

இப்படி அமைச்சர் றொனி டி மெல் சொன்னார். (இ-எ)

## 5,400 தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்படுவர்

கொழும்பு, ஜூலை 27

இலங்கை — இந்திய உடன்பாடு கைச்சாத்திட்டவுடன் சுமார் 5 ஆயிரத்து 400 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்.

இப்படி கொழும்பில் சில வட்டாரங்களை ஆதாரங்காட்டி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் கைதிகள் விடுவிக்கப்படுவரா அல்லது அதற்கு முதல் விடுதலை செய்யப்படுவரா என்பதை அவ்வட்டாரங்கள் தெரிவிக்க மறுத்துவிட்டன. (இ-எ)

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் காலத்தை ஜனாதிபதியே தீர்மானிப்பார்

கொழும்பு, ஜூலை 27

ஒரு வருடத்தின் பின்னர் எப்போது கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடம் இருக்கும்.

உத்தேச இந்திய—இலங்கை உடன்பாட்டில் இப்படிக் கூறப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் நடத்த வேண்டும் என்ற தமிழர் அமைப்புக்களின் கோரிக்கையை கொழும்பு அரசு நிராகரித்து விட்டது.

சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிக்க மூவர் கொண்ட குழு நியமிக்கப்படும்.

தலைவராக பிரதம நீதியரசர் இருப்பார்.

அரசு பிரதிநிதி ஒருவரும், தமிழர் பிரதிநிதி ஒருவரும் குழுவில் அங்கம் வகிப்பர். (இ-எ)

## வன்செயல்களை அடக்க இந்திய துருப்புக்கள் வரும்!

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் புதிதாக ஏற்படும் வன்செயல்களை அடக்க இந்தியத் துருப்புக்கள் இலங்கை வரும்.

இதற்கு வழிவகுப்பதாக இந்திய-இலங்கை உடன்பாடு அமைந்துள்ளது என்று தெரிய வருகின்றது.

உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் வன்செயல்கள் ஏற்பட்டால் இலங்கை அரசின் வேண்டுகோளின் மீது தனது துருப்புக்களை அனுப்பத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்திருக்கின்றது.

இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்க வெளிநாட்டுப்படையினரை வரவழைக்கப் போவது இல்லை என்று உடன்பாட்டில் இலங்கை உறுதி கூறியிருக்கின்றது. (இ-எ)

## தலைவர்கள் கருத்து

கொழும்பு, ஜூலை 27

வடக்கு — கிழக்கு மாகாண இணைப்புப் பற்றிய புதிய யோசனை பற்றி கொழும்பில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அவை வருமாறு:

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா:

இந்தியாவுடன் செய்துகொள்ளப்படும் எந்த உடன்பாட்டையும் ஆட்சிக்கு வரும் போது கௌரவிக்கும் கடப்பாடு சுதந்திரக் கட்சிக்குக் கிடையாது.

ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளும் உடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



குட்டையைக் குழப்பி தங்களுக்கு லாபம்தேடுற தில்லை ஸ்ரீமா மட்டுமில்லை எல்லா அரசியல்வாதியளும் உப்பிடித்தான் எண்டது தெரியுமே...?

# பொது எதிரியான ஜனாதிபதியை எதிர்க்க ஒன்று சேருங்கள்!

## பிரேமதாசவுக்கு ஸ்ரீமா அழைப்பு

கொழும்பு, ஜூலை 27

பொது எதிரியான ஜனாதிபதி ஜெயவர்த்தனவை எதிர்த்து போராட்டம் நடத்த ஒன்று சேரும்படி பிரதமர் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பை விடுத்தவர் முன்னாள் பிரதமரும் சுதந்திரக் கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆவர்.

கடந்த வெள்ளிக்கிழமை டிமெல் பூங்காவில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இந்த அழைப்பை அவர் விடுத்தார்.

நேற்று கண்டியில் முஸ்லிம் மாநாடு ஒன்றில் சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ள இருந்தனர்.

இதனிடையில் புதிய யோசனைகளை எதிர்க்கும் இயக்கத்திற்கு ஆதரவு தேடும் நோக்குடன் திருமதி பண்டாரநாயக்கா நேற்று கொழும்பில் பௌத்த மத குருமார்கள், பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார். (இ-எ)

### சுபநேரம்

27-07-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12. 02 முதல் 1.32 வரை
ராகுகாலம்:-
7.32 முதல் 9.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பிரதமரைச் சந்தித்து புதியயோசனை குறித்து ஜனாதிபதி விளக்கினார்

கொழும்பு, ஜூலை 27

பிரதமர் பிரேமதாசாவை நேற்று அவரின் அலரிமாளிகையில்ஜனாதிபதி ஜெயவர்த்தனா சந்தித்துப் பேச்சுக்கள்நடத்தினார்.

பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு நேற்றுக்காலைதான் பிரதமர் கொழும்பு திரும்பினார்.

இனப்பிரச்சினை சம்பந்தமான புதிய யோசனைகள் குறித்து ஜனாதிபதி, பிரதமரிடம் விவரித்தார்.

அவதானமாக அவற்றைக் கேட்டுக்கொண்ட (4 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய கோளம்

மாஸ்கோ, ஜூலை 26

புதனுக்கும் வியாழனுக்கும் இடையில் மிகச் சிறிய கோளம் ஒன்று இருப்பதாக சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். (அ)

## எம். ஜி. ஆருடன் கூட்டணி மற்றும் நான்கு இயக்க பிரதிநிதிகளும் டில்லி விரைவு

புதுடில்லியில் இந்திய அதிகாரிகள் தமிழர் அமைப்புக்களுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் கலந்து கொள்கின்றார்.

சென்னையில் உள்ள ஏனைய தமிழர் அமைப்புக்களும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்கின்றன.

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்றுக் காலை விமானப் படை விமானத்தில் புதுடில்லி சென்றடைந்தார்.

உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் கூடச் சென்றார்.

இன்னொரு தனி விமானத்தில் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் புதுடில்லி சென்றனர்.

கூட்டணியின் பிரதிநிதிகளாக தலைவர் எம். சிவசிதம்பரம், செயலதிபர் அ. அமிர்தலிங்கம், உபதலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் பேச்சுக்களில்

### வளலாயில் சிப்பாய்கள் -- புலிகள் மோதல்:

## ஷெல்லுக்கு வயோதிபர் பலி!

அச்சுவேலி, ஜூலை27

வளலாய் இராணுவ முகாமில் இருந்து நேற்று இராணுவத்தினர்மேற்கொண்ட ஷெல் தாக்குதல் காரணமாக வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

தாய், பிள்ளை உட்பட ஐந்துபேர் காயமடைந்தனர்.

பத்தமேனி, அச்சுவேலிப் பகுதிகளில் பல வீடுகள் சேதமடைந்தன.

சனிக்கிழமை இரவு வளலாய்ப் பகுதியில் நடைபெற்ற புலிகள் — சிப்பாய்கள் மோதலையடுத்து அனேக மக்கள் இடம்பெயர்ந்து ஆவரங்கால், புத்தூர் பகுதி (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளி

# பிரயாண ஒழுங்குகள்

# HORIZON ENTERPRISES

## ★ குவைத் ● மாலைதீவு ★ பாஹ்ரெயின் ● சவூதி அரேபியா

முதலான மத்திய கிழக்கு நாடுகளுக்கான அனைத்து வேலைவாய்ப்புகளுக்கும் பிரயாணம் செய்ய விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

ஏற்கனவே எம்மிடம் பாஸ்போட் தந்தவர்களின் பிரயாணத்திற்கான அனைத்து ஒழுங்குகளும் தயார் செய்யப்பட்டுள்ளது. இவர்களின் பெயர், விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. 1ஆம் திகதி சனிக்கிழமை பிரயாணம் அதற்கு முன்னர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். பெயர் குறிப்பிடப்படாதவர்களும் உடன் எம்மைக் காரியாலயத்தில் சந்திக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | முருகுப்பிள்ளை லெட்சுமணன், | — | கலைநகர், சித்தன்கேணி. |
| 2. | சின்னையா பொன்ராசா, | — | சங்கானை கிழக்கு, காபன்டை கட்டுவல் வீதி, சங்கானை. |
| 3. | செல்லத்துரை சிவரத்தினராசா, | — | குறிஞ்சாத்தீவு, ஆனையிறவு. |
| 4. | மாணிக்கம் கிருஷ்ணன், | — | உரும்பிராய் கிழக்கு, யோகபுரம். |
| 5. | செல்லப்பா சுதாகரன், | — | சமாதி கோவிலடி, குப்பிளான், ஏழாலை. |
| 6. | துரைராசா சக்திதாசன், | — | அரசடி ஒழுங்கை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. |
| 7. | வேலுப்பிள்ளை அமரசிங்கம், | — | சண்டிலிப்பாய் சந்தி, சண்டிலிப்பாய். |
| 8. | நடராசா இராமச்சந்திரன், | — | ஆவரங்கால், புத்தூர். |
| 9. | செல்லப்பா சுப்பையா கணேசநாதன், | — | நாவற்குழி, கைதடி. |
| 10. | தருமராசா ஸ்ரீஸ்கந்தராசா, | — | 723, மானிப்பாய் ரோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். |
| 11. | முருகேசு சுப்பிரமணியம் ஸ்ரீகாந்தன், | — | B.H. Lane, இருபாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 12. | தம்பிராசா செல்வச்சந்திரன், | — | பாரதி லேன், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம், |
| 13. | ஆழ்வாப்பிள்ளை பரமநாதன், | — | பார்வதி பவனம், அல்வாய் தெற்கு, அல்வாய். |
| 14. | ஜேம்ஸ் ஜெயசீலன் ரஞ்சன் சவரிமுத்து, | — | |
| 15. | கந்தசாமி மதனகோபாலன், | — | டச்ரோட், வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை. |
| 16. | சோமசுந்தரசர்மா ரவிச்சந்திரன். | — | சித்திவிநாயகர் கோவிலடி, அரியாலை. |
| 17. | சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை றெபேட் எட்மன்ட், | — | தவசிகுளம், மிருசுவில். |
| 18. | சுப்பிரமணியம் ஞானகணேசு, | — | வேம்படி ரோட், உடுத்துறை, தாளையடி. |
| 19. | வரப்பிரகாசம் செல்வராசா, | — | கூழாவடி, செட்டிதோட்டம், 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. |
| 20. | சிவக்கொழுந்து பரமேஸ்வரன், | — | |
| 21. | கிருஷ்ணபிள்ளை ரவீந்திரன், | — | கவுந்தில், கரவெட்டிகிழக்கு, கரவெட்டி. |
| 22. | செலவராசா ஜெயசீலன், | — | மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 23. | தியாகராசா சண்முகநாதன், | — | கல்வயல் வடக்கு, சாவகச்சேரி. |
| 24. | சூசைப்பிள்ளை ஜோசெப் ஜேசுதாசன், | — | லோட்டஸ் ரோட், சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு. |
| 25. | கதிரவேலு ஸ்ரீதரன், | — | |
| 26. | செபமாலை டேவிட், | — | 4 ஆவது மைல், ஆனைக்கோட்டை. |
| 27. | முகமட் சாகுல் அமீர், | — | |
| 28. | பொன்னையா குணரட்ணம், | — | |
| 29. | சின்னத்துரை புண்ணியமூர்த்தி, | — | இல. 35, 5ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை. |
| 30. | மயில்வாகனம் ஜெயகாந்தன், | — | |
| 31. | நாகலிங்கம் ஜெயானந்தராசா, | — | 24, கோவில் வீதி, சிக்னல் போஸ்ட், சுண்டிக்குளி. |
| 32. | சுப்பிரமணியம் இராசையா இராசரட்ணம், | — | C/o. N. இராசலிங்கம், ஏழாலை மத்தி, ஏழாலை. |
| 33. | அந்தோனிப்பிள்ளை கொட்வின் விமலதாஸ், | — | |
| 34. | மாரிமுத்து நாகேஸ்வரன், | — | வேலணை கிழக்கு, வேலணை. |
| 35. | பொன்னையா புண்ணியமூர்த்தி, | — | நீர்வேலி வடக்கு, நீர்வேலி, |
| 36. | சவரிராஜப்பு சரண்சிலஸ், | — | கிழக்குத்தெரு, ஊர்காவற்றுறை. |
| 37. | F. டொமினிக் ஜீவநாதன், | — | மேலயப்புலம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி. |
| 38. | அலோசியஸ் எட்வேட் இன்பராஜா, | — | |
| 39. | முருகுப்பிள்ளை ஜெகன்மோகன், | — | கலைநகர், சித்தன்கேணி. |
| 40. | S. பற்றிக் ஜெயராஜா, | — | கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. |
| 41. | கைலாசபிள்ளை வாலாகரன், | — | |
| 42. | சடையர் வேலாயுதபிள்ளை, | — | வரணி, இயற்றாலை. |
| 43. | ஆழ்வார் கந்தசாமி, | — | வரணி, இயற்றாலை. |
| 44 | வேலன் தங்கராசா, | — | வரணி, இயற்றாலை. |
| 45. | பிலிப் ஜேசுதாசன், | — | பலாலிச்சந்தி, வயாவிளான். |
| 46. | பஸ்ரியன் மலகியல் வின்சன் ரக்கி, | — | இல 11 St. செபஸ்ரியன் ரோட், குருநகர், யாழ்ப்பாணம். |
| 47. | இராசையா தேவராசா, | — | புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய். |
| 48. | சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை பூபாலசிங்கம், | — | பலாலி ரோட், 1/20 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். |
| 49. | காசிப்பிள்ளை அமிர்தலிங்கம், | — | கச்சாய் தெற்கு, கொடிகாமம். |
| 50. | செல்லத்துரை தெட்சணாமூர்த்தி ஜெயகுணநாதன், | — | அராலி கிழக்கு, அராலி. |
| 51. | அந்தோனி பிரான்ஸிஸ் ஹென்றி, | — | மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய். |
| 52. | கதிரன் மணியம் சேதீஸ்வரநாதன், | — | கல்லுடை, புத்தூர் கிழக்கு, புத்தூர். |
| 53. | சந்தையா செல்லத்துரை ஜனதாசன், | — | கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். |
| 54. | கணபதி தம்பிராசா மகாலிங்கம், | — | ஐயனார் கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். |
| 55. | கதிரவேலு சிங்கராசா, | — | சரவணை கிழக்கு, வேலணை. |
| 56. | வேலப்பொடி [illegible]பிராசா குலபதி, | — | கோணப்புலம், மல்லாகம், யாழ்ப்பாணம். |
| 57. | இராசு இராச[illegible]யகம், | — | புதுமடம் உடுவில் தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| 58. | வீரசிங்கம் நவரட்ணம் கணேசபதி, | — | மானிப்பாய் ரோட், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். |
| 59. | முத்தன் அரியராசா, | — | உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். |
| 60. | கந்தையா ஐயாக்குட்டி கிருபாகரன், | — | இணுவில் தெற்கு, இணுவில். |
| 61. | சண்முநாதன் மனோரஞ்சன், | — | பாடசாலை ஒழுங்கை, தாவடி, கொக்குவில். |
| 62. | கதிர்காமு விக்னேஸ்வரன், | — | புதிய பூமி, இடைக்காடு, அச்சுவேலி. |
| 63. | செல்லத்தம்பி இராசையா பரமேஸ்வரன், | — | நந்தாவில் ஒழுங்கை, தாவடி, கொக்குவில். |
| 64. | வீரகத்தி சுப்பையா பத்மநாதன், | — | குப்பிளான், ஏழாலை. |
| 65 | முத்தன் அரியராசு, | — | உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். |
| 66. | சுப்பையா சுந்தரலிங்கம், | — | சரசாலை வடக்கு, சாவகச்சேரி. |
| 67. | சண்முகம் ரவீந்திரராசா, | — | செட்டியார் மடம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. |
| 68. | ஐயாத்துரை லிங்கேஸ்வரன், | — | சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். |

அவ்வப்பகுதி மக்களின் வசதிகளை முன்னிட்டு 2 கிளைக் காரியாலயங்கள் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

முகவரிகள்:

**R. குணரத்தினராசா**
கண்டி வீதி, கொடிகாமம்.
(கொடிகாமம் புகையிரதநிலையம் முன்பாக)

**இலியாஸ் ஏபிரகாம் A. P.**
இரண்டாம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

தலைமைக் காரியாலயம்:

# ★ A. பத்மதாஸ் ★

97/1 பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

கடிதமூலம் தொடர்புகொள்ள விரும்புவோர் சுய விலாசமி[illegible] முத்திரை ஒட்டிய [illegible] தொடர்புகொள்ளவும். நேரில் தொடர்புகொள்ள விரும்புவோர் தினமும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையுள்ள காரியாலய நேரத்தில் சந்திக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

— பைபிள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
27.07.1987 த.பெ.இல - 23

# இந்தியாவின் வெற்றி

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தப்பட்டு மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்பது ஒரு தகவல்.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க வகை செய்யும் ஸ்ரீலங்கா அரசு — தமிழர் அமைப்புகள் கைச்சாத்திடும் ஒப்பந்தம் முதலாவது.

மேற்கண்ட ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கான முழுப்பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டு உத்தரவாதம் வழங்கும் ஒப்பந்தம் இரண்டாவது. இதில் பிரதமர் ராஜீவ் காந்தியும், புலிகள் தலைவர் பிரபாகரனும் கைச்சாத்திடுவர்.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை ஸ்ரீலங்கா ஏற்றுக்கொள்ளவும், தமிழர் விடுதலை இயக்கங்கள் ஒப்பந்தத்தை மீறாமல் நடந்துகொள்ள ஸ்ரீலங்காவுக்கு இந்தியா உத்தரவாதம் வழங்கவும் வகை செய்யும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூன்றாவது. இதில் திரு. ராஜீவும், திரு. ஜே. ஆரும் கைச்சாத்திடுவர்.

மூன்றாவது ஒப்பந்தம் பற்றியே இங்கு ஆராய்வோம்.

உத்தேச இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் பின்வரும் அம்சங்களும் அடங்கும் என அறியப்படுகிறது.

★ கொழும்பில் உள்ள இஸ்ரவேலிய நலன் பிரிவு மூடப்படும். இங்குள்ள இஸ்ரேலிய ஆலோசகர்களின் சேவை நிறுத்தப்படும்.
★ ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் பயிற்சி அளிப்பது நிறுத்தப்படும்.
★ ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.
★ இலங்கையில் பயங்கரவாதம் தலைதூக்கினால் அதனை அடக்குவதற்கு இந்தியா முழு அளவில் உதவும்.

இவற்றை நோக்கும் போது, சர்வதேச இராஜதந்திர வட்டாரங்கள் நிச்சயம் ஆச்சரியம் அடையவே செய்யும்.

ஜே. ஆர். தலைமையிலான ஐ. தே. க. அரசு எப்போதும் மேற்கத்திய (முதலாளித்துவ) விசுவாசியாகவே விளங்கியது.

கடந்த பத்து வருடங்களாகப் படிப்படியாக மேற்கு நாடுகளுடனான உறவைப் பெரும் அளவில் வளர்த்துக் கொண்டது. அமெரிக்காவை அடித்தளமாக வைத்துக் கொண்டு மேற்குலக (சிறப்பாக அமெரிக்க ஆதரவு நாடுகளுடன்) உறவை வளர்த்தது.

பாகிஸ்தான், இஸ்ரவேல் ஆகிய நாடுகளுடனான உறவும் அப்படியே.

ஆனால் கடந்தஇரண்டொரு வாரங்களில் இலங்கை அரசின் போக்கு முற்றிலும் மாறிவிட்டது.

அமெரிக்காவின் ஐ. நா. தூதுவர் வேர்னன் வால்டர்ஸ் கொழும்பு அரசுடன் வந்து பேசியதைத் தொடர்ந்தே இஸ்ரவேலிய நலன் பிரிவு, அமெரிக்கத் தூதரகத்தில் திறக்கப்பட்டது.

அதனை உடனடியாக மூடுவது என்பது அமெரிக்காவின் முகத்தில் அறைந்ததற்குச் சமம். பிரதமர் பிரேமதாசா, "விசுவாசம் மிக்க நண்பன்" என்று வர்ணித்த பாகிஸ்தானுடனான உறவும் அமெரிக்காவின் தொடர்பில் மலர்ந்ததே.

ஜூன் மாதத்தில், இந்தியா யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை விமானத்திலிருந்து போட்டது மனிதாபிமான நடவடிக்கை என்று பாகிஸ்தான் கூறிய பின்னரும், அதனை விசுவாசம் மிக்க நண்பராக எப்படிக் கருத முடியும் என்று ஜே. ஆர். சந்தேகித்து இருக்க வேண்டும்.

இனப்பிரச்சினையை இந்தியாவே மத்தியஸ்தம் செய்து தீர்த்து வைக்கவேண்டும் என்று அமெரிக்காவும் கூறிவிட்டது. ஆகவே அதனை நம்புவது, மண்குதிரையை நம்பி ஆற்றில் கால் வைப்பது போலாகும் என்றும் திரு. ஜெயவர்த்தன சிந்தித்திருக்க வேண்டும்.

உள்நாட்டிலோ, என்னதான் வீரப்பிரதாபம் பேசினாலும், எவ்வளவு பொய் மூடைகளை அவிழ்த்து விட்டாலும், எவ்வளவு பணத்தை வாரி இறைத்தாலும் புலிகளை வெல்லமுடியாத விரக்தி நிலை. 'ஒப்பறேஷன் லிபறேஷன்' மூலம் கைப்பற்றிய வடமராட்சியையே ஸ்திரப்படுத்த முடியாத வெட்கம்.

எல்லாம் சேர்ந்து ஜனாதிபதியின் மனதைக் குழப்பிய நேரத்தில், இந்தியா சமயோசிதமாகவும், மதிநுட்பமாகவும், ராஜதந்திரத்துடனும் நடந்துகொண்டு வெற்றி ஈட்டியிருக்கிறது.

ஆம், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. இந்திய எதிர்ப்புச் சக்திகளுடன் உறவாடிய நிலை மாறி இலங்கை இனிமேல் இந்தியாவுடன் நெருங்கி உறவாட மூன்றாவது ஒப்பந்தம் வகை செய்யும் என்பது நிச்சயம்.

சரியான ராஜீகக் கண்ணுடன் பார்ப்போமானால், உத்தேச ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் போன்றதே.

இதனை உருவாக்குவதில் இந்தியா கண்ட வெற்றி பிரமாதமானது. தனக்கு எதிராகக் கொக்கரித்த அண்டை நாட்டு ஆட்சியை, தமது பக்கத்தில் வெகு சாதுர்யமாகச் சேர்த்துக் கொண்டுவிட்டது.

# அமெ.வர்த்தக அமைச்சர் விபத்தில் பலி!

நியூயோர்க், ஜூலை 27

அமெரிக்க வர்த்தக அமைச்சர் மல்கம் போல்டிரிக் நேற்று நிகழ்ந்த விபத்து ஒன்றில் மரணமானார்.

சான்பிரான்ஸிஸ்கோவிற்கு 60 மைல் தொலைவில் உள்ள இடத்தில் குதிரை விளையாட்டு ஒன்றில் ஈடுபட்டிருந்த போது அவர் விபத்துக்குள்ளானார்.

அவர் ஓட்டிச் சென்ற குதிரை கவிழ்ந்தபோது அவர் குதிரைக்கு கீழே சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தையடுத்து ஹெலிகொப்டர் ஒன்றில் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், அங்கு மரணமானார்.

1981 ஆம் ஆண்டு ஜனாதிபதி றேகனின் அமைச்சரவையில் சேர்ந்து கொண்ட அவர், இவ்வாண்டு ஆரம்பத்தில் அமெரிக்காவில் ஜப்பானிய பொருள்கள் சிலவற்றின் இறக்குமதிக்கு சில வரிகளை விதித்ததன் மூலம் பெரும் பரபரப்மை ஏற்படுத்தியிருந்தார். (உ)

## அவசரகாலச் சட்டம்

கார்ட்டூம், ஜூலை 26

சூடானில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

உணவுத் தட்டுப்பாடு, கள்ளச்சந்தை ஆகியவற்றைத் தவிர்க்கவும்—

ஆயுதக் கொள்ளைகளை நடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவுமே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக சூடான் அரசுத் தலைவர் அறிவித்தார். (உ-எ)

## பவித்திரா அறிவிப்பு

சுவா, ஜூலை 26

பிஜியின் ஆட்சி நிர்வாகத்தில் பழங்குடிகளுக்கு நிரந்தர பெரும்பான்மை வழங்கும் அரசமைப்புத் திட்டத்தை எதிர்ப்பேன்.

பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் டாக்டர் பவித்திரா முன் கண்டவாறு அறிவித்திருக்கின்றார். (உ-எ)

# இ. காங்கிரஸ் புனரமைக்கப்படும்

## ராஜீவ் காந்தி அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 26

இந்திரா காங்கிரஸ் கட்சி புனரமைக்கப்படும். ஆனால் காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் மாற்றம் செய்யப்படமாட்டாது.

-இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

எதிர்க்கட்சிகள் கோரிக்கையை ஏற்று நாடாளுமன்றத் தேர்தலை நடத்த மாட்டேன்.

இந்திரா காங்கிரஸ் கட்சியைப் பலவீனப்படுத்துபவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவர்.

உடனடியாக யாரும் இப்போது வெளியேற்றப்பட மாட்டார்கள்.

மழைக்காலக் கூட்டத்தொடர் முடிவடைந்ததும் அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் செய்யப்படும்.

-இப்படி பிரதமர் தெரிவித்தார். (உ-எ)

## வெள்ளத்தில் 147 பேர் பலி

தெஹ்ரான், ஜூலை 26

ஈரானின் தெற்கு மாகாணத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டது.

இதனால் 147பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (உ-எ)

## கொடி எரிப்பு

லண்டன், ஜூலை 26

அமெரிக்க தேசியக் கொடியை ஆயிரக்கணக்கான ஈரானியர்கள் அண்மையில் எரித்தனர்.

இச்சம்பவம் சவூதி அரேபியாவில் மதினாவில் இடம்பெற்றது. (உ-எ)

## புதுடில்லியில் பாரதி பாடல்

புதுடில்லி, ஜூலை 26

இந்திய ஜனாதிபதியாக நேற்றுப் பதவி ஏற்ற திரு. ஆர். வெங்கட்ராமன், தமது முதலாவது உரையில் பாரதி பாடல் ஒன்றை மேற்கோள்காட்டிப் பேசினார்.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரை கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ"

என்ற பாரதியார் பாடலை சுதந்திரத்தை எல்லோரும் சேர்ந்துகட்டிக்காக்க வேண்டும் என்று குறிப்பிடுகையில் தெரிவித்தார். (அ)

# வான வெளியில் முட்டைஅடைகாக்கும் நவீன இயந்திரம்!

மாஸ்கோ, ஜூலை 26

விண்கலத்தினுள் முட்டை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் சாதனம் ஒன்றை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதனால் வானவெளியில் நீண்டகாலம் விண்கலந்தினுள் சஞ்சரிக்கும் விஞ்ஞானிகள் இப்படி பிறக்கும் கோழிக் குஞ்சுகளை பொரித்துஉணவாக்கலாம்.

- இப்படி டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விண்கலத்தினுள் இருக்கும் அடைகாக்கும் சாதனத்தில் இரண்டு அறைகள் இருக்கும்.

முதலாவது அறையில் முட்டைகள் வைக்கப்பட்டு 20தினங்கள் அடைகாக்கப்படும்.

தாய்க்கோழி போன்று முட்டைகளை மாற்றி அடைகாக்கக்கூடிய சாதனம் அந்த அறையில் இருக்கும்.

பின்னர் இரண்டாவது அறைக்கு முட்டைகள் மாற்றப்படும். பாரமில்லாத நிலையில் முட்டைகள் குஞ்சு பொரிக்கும்.

குஞ்சுகள் ரப்பர் சுவரினால் சிறிய 'செல்'களுக்குள் ஆடாமல் அசையாமல் வைக்கப்படும்.

ஒவ்வொரு 'செல்'லுக்குள் உணவுத் தட்டு, சிறிய தண்ணீர் தாங்கி ஆகியன அமைக்கப்பட்டிருக்கும். (உ-எ)

## கொலைப் பயமுறுத்தல்

புதுடில்லி, ஜூலை 26

தன்னைக் கொலை செய்யப் போவதாக ஒரு கூட்டம் பயமுறுத்தியதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. பி. சிங் முறையிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுமார் நூறு பேர் தமது வீட்டுக்கு வந்து அதனைச் சேதப் படுத்தியதோடு தமக்கு இம்சை விளைவிக்க முயன்றதாகவும் அவர் முறையிட்டுள்ளார்.

'ராஜீவ் நீடு வாழ்க' என்று கோஷமிட்ட அந்தக் கோஷ்டி 'வி.பி. சிங் மாள்க' என்றும் சத்தியதாம். (அ)

# மாதகல் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க கி. அ. சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை27

மாதகலில் தங்கியுள்ள அகதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாதகல் தெற்கு விபுலானந்தர் கிராம அபிவிருத்திச் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் வசித்துவந்தவர்களே இடம் பெயர்ந்து வந்து மாதகலில் தங்கியுள்ளனர்.

அவர்களின் வீடு, வாசல்கள் எரிக்கப்பட்டுவிட்டன. திரும்பவும் பழைய இடங்களுக்குச் சென்ற இவர்கள் படையினரின் அட்டூழியத்துக்குப் பயந்து மீண்டும் மாதகல் வந்துள்ளனர்.

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

# விதவைப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பு

## மன்னாரில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை27

மன்னாரில் உள்ள விதவைப் பெண்களுக்கு நிரந்தர தொழில் வாய்ப்புக்களைத் தேடிக்கொடுக்க மன்னார் அகதிகள் புனர்வாழ்வு அமையம் முன்வந்துள்ளது.

இவ்வாறு மேற்படி அமையத்தின் செயலர் சின்கிளேயர் பீற்றர் தெரிவித்தார்.

முதல்நடவடிக்கையாக 40 விதவைப் பெண்கள் இந்த உதவியைப் பெறுவர்.

15 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த விதவையர்களுக்கு கருவாடு உற்பத்தி செய்வதற்காக ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபாவும்—

மேலும் 15 குடும்பங்களுங்கு தங்கள் இடங்களிலேயே கடைகள் வியாபார நிலையங்கள் அமைப்பதற்குவசதியாக ஒவ்வொருவருக்கும் தலா 3ஆயிரம் ரூபாவும்.

பத்து குடும்பங்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பைப் பெறக்கூடியதாக ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்த உதவியைப் பெறுவோர் மிக வறிய குடும்பத்தில் உள்ளவர்களாகவும், இதுவரை புனர்வாழ்வுக்கான உதவி எதையும் பெறாமல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதியையுடைய, மன்னார், நானாட்டான், அடம்பன் சிலாவத்துறை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவில் வசிக்கும் விதவையர் குடும்பங்கள் இந்த உதவிக்காக விண்ணப்பிக்கலாம்.

உதவி அரச அதிபர் ஊடாக பொதுகாரியதரிசி, மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும்.

—இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## சிவராசாவுக்கு அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை27

அகால மரணமான வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. சிவராசாவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொதுக்கூட்டம் ஒன்று அதிபர்கள்-ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களினால் எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட இருக்கிறது. (இ)

# சமய சந்நிதிகளில்

## அராலியில் ஆடிப்பூர விழா

அராலி, ஜூலை 27

அராலி ஆவரம்பிட்டி அருள்மிகு முத்துமாரியம்பாள் ஆலய ஆடிப்பூர விழா எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும்.

அன்று பகல் விசேஷ அபிசேக ஆராதனைகளும் பிற்பகல் பொங்கலையும் தொடர்ந்து மாலை 6 மணிக்கு அம்பாள் வீதியுலா இடம்பெறும்.

இந்த ஆலயத்திற்கு செல்லும் அடியார்களின் நன்மை கருதி அராலி தனியார் போக்குவரத்து சபைசங்கத்தினர் விசேஷ பஸ் சேவைகளை நடத்தவுள்ளனர்.

மேற்படி ஆலயத்தில் இவ்வருட மகோற்சவம் இரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ - 12)

## இலவச கண்ணாடி விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகம் 'சற்றுக்' கண் சத்திர சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கண் சத்திர சிகிச்சை செய்து மூக்குக்கண்ணாடி பாவிக்க டாக்டர் அனுமதித்திருந்தும் வசதியின்மை காரணமாக அக்கண்ணாடியினைப்பெற்றுக் கொள்ளமுடியாதவர்களுக்கு கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக் கழகம் இலவச மூக்குக் கண்ணாடியை வழங்கும். (உ-76)

## சைக்கிள்களை இழந்தனர்

காங்கேசன்துறை, ஜூலை 27

வீடு பார்க்கச் சென்றவர்கள் தமது சைக்கிள்களை இராணுவத்திடம் இழந்து கவலையுடன் திரும்பினர்.

தையிட்டியைச்சேர்ந்த சுமார் 15 பொதுமக்கள் அண்மையில் தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக குறுக்குப் பாதைகளால் சென்ற சமயம் தையிட்டி நெசவு நிலையத்திற்கருகில் நின்ற இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்களை இருத்தி விட்டு இராணுவத்தினர் சைக்கிள்களை எடுத்துச் சென்றதாகவும் திரும்பி வந்து ஒருவருக்கு மட்டும் அவரது புதிய சைக்கிளுக்குப் பதிலாக பழைய சைக்கிள் ஒன்றை கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதே நேரம் மேற்படி நெசவு நிலைய தகரங்களை இராணுவத்தினர் கழற்றிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. (உ-68)

## எதிர்பார்த்த விளைச்சல் இல்லை

அராலி, ஜூலை 27

அராலி பகுதியில் இம்முறை எதிர்பார்த்தளவு பம்பாய் வெங்காய விளைச்சல் கிடைக்காததனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

இந்தப் பகுதியின் முக்கிய வருமானம் தரும் பயிரான பம்பாய் வெங்காயச் செய்கையின் அறுவடை தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தை வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து 1 கிலோ சுமார் 10 ரூபா முதல் 12 ரூபா வரை விலை கொடுத்து கொள்வனவு செய்கின்றனர். (உ-7-12)

# செய்திக்கொத்து

## விண்ணப்ப முடிவு திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சை இவ்வாண்டு மாத்திரம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் முதலாம் திகதி நடத்தபபடவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்ப இறுதிநாள் இம்மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் பாடசாலை அதிபர்களின் - ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க அது செப்டம்பர் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் திரு. வ. சுந்தசாமி தெரிவித்துள்ளார். (உ-161)

## யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை27

யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை கைலாசபதி அரங்கில் நடைபெற இருக்கின்றது.

இவ்விழாவில் கலந்துகொண்டு சான்றிதழ்கள் பெற விரும்பும் மாணவர்கள் பதிவாளருக்கு உடன் விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-88)

## "மற்றவர்களுக்குக் கூறுவேன்"

யாழ்ப்பாணம், ஜூலை27

யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை எனது சர்வதேச நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவேன்.

யாழ் நகரின் நிலைமைகளை நேரிலும், வீடியோ காட்சி மூலமும் கண்டறிந்த சுவிஸ் தூதர் ஹென்றிகுயினல் இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணத்தின் அழிவுகளைப் பார்வையிட்ட அவர் தன்னைச் சந்தித்த பிரமுகர்களிடம் இதனைத் தெரிவித்தார். (அ-7)

## ஏமாற்றப்படவில்லை என்கிறார் மஜீத்

கொழும்பு, ஜூலை 27

இலங்கை அரசின் புதிய யோசனையினால் எவரும் ஏமாற்றப்படவுமில்லை; நாடு பிளவுபடவும் இல்லை.

பிரதி அமைச்சர் அப்துல் மஜீத் இப்படிச் சொன்னார்.

ஐ. தே. க. நிறைவேற்றுக் குழுவின் கூட்டத்தில் பேசுகையில் பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

புதிய யோசனைகளை கிழக்கு முஸ்லிம்கள் ஆதரிப்பதாக ஜனாப் மஜீத் சொன்னார். (இ-எ)

## நல்லூரில் முத்தையாவின் சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு இருபத்தைந்து தினங்களிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன கலா மண்டபத்தில் இம்மாதம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இச் சொற்பொழிவு நடைபெறும்.

வேதாந்த சாகரம், ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா இத் தொடர் சொற்பொழிவை நடத்துவார்.

தினமும் பி. ப. 2-30 மணிக்கு பெரியபுராணபடனமும் பி. ப. 3.15 மணிக்கு கந்தர் அலங்கார சொற்பொழிவுகளும் நடைபெறும். (உ-161)

## மின்கம்ப மரணதண்டனை

செட்டிகுளம் பெரிய புளியாலங்குளம் பகுதியில் போராளிகளினால் இளைஞர் ஒருவருக்கு மின்கம்ப மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இனங்காணப்படாத இச்சடலம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வவுனியா வைத்தியசாலைக்கு அப்பகுதி கிராம சேவை அலுவலரினால் கொண்டு வரப்பட்டுள்ளது. (உ-164)

## பொய்யாமொழி



குறள்:

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

பொருள்:

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனைத் தெளியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கோவில் அபிஷேகச் சாமான்கள், கும்பாபிஷேகச்சாமான்கள், சங்காபிஷேகச் சாமான்கள், புதுமனை அத்திவாரச் சாமான்கள், நாள் சரக்குகள், ஆயுள்வேத மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனைத் திரவியங்கள் சந்தனாதி தைலம் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
இல. 4, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

27-07-1987 திங்கட்கிழமை

★ குங்குமப்பூ No.1, அஷ்டபந்தன மருந்து T.T.S.சாம்பிராணி, கைமார்க் சாம்பிராணி இந்தியா ஊதுபத்திகள், மஜிமா அத்தர், நயிட்குயின் அத்தர், கலர் குங்குமம், இந்தியா பெருங்காயம், தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

### இன்று சமாதானத்திர்வு இல்லையேல் நாளை...

# பிரபாகரனின் காலடிக்கு செல்லவேண்டி நேரிடும்

## இதை விரும்புகின்றீர்களா என்று கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 27
இன்று சமாதானத் தீர்வைக் காணவிட்டால் நாளை நான் பிரபாகரனின் காலடிக்குச் செல்ல நேரிடும். இதை நீங்கள் விரும்புகின்றீர்களா?

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா கேட்டார்.

ஐ. தே. க. நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி இக்கேள்வியை எழுப்பினார். (இக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் சில பகுதிகள் நேற்றைய உதயனில் வெளிவந்தது தெரிந்ததே).

ஜனாதிபதி மேலும் சொன்னதாவது:-

வடபகுதி தீவிரவாதிகளுக்கு விமானங்களைத் தாக்கும் ஏவுகணைகள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாக விமானங்கள் பறப்பதும் கடினமாகலாம்.

நவசமசமாஜக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன எனது புதிய யோசனையை ஆதரிக்கின்றன.

சுதந்திரக் கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் மட்டுமே எதிர்க்கின்றன.

வடக்கு - கிழக்கு மாநில அமைப்புப் போன்ற நான்கு அமைப்புக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

### புதிய குதிரை வாகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயத்தில் புதியதோர் சோடிக் குதிரைவாகனம் செய்யப்பட்டுள்ளது.

திரு. ச.சிவகுருநாதன் —குமரகுருநாதன் அன்பளிப்புச் செய்த இக் குதிரைவாகனம் விநாயகர் சிற்பாலயத் தலைவர் ''சிற்பஜோதி'' திரு. சு. இராஜரத்தினம் குழுவினரால் அமைக்கப் பட்டதாகும்.

இன்றைய 13 ஆம் திருவிழாவில் அம்பாள் இதில் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி இடம்பெறும். (இ)

## வெள்ளிக்கிழமைக்கு முன் ஆயுதங்களை ஒப்படைப்பது சாத்தியப்படமாட்டாதாம்

புதுடில்லி, ஜூலை 27
உடன்பாடு கைச்சாத்திட்ட பின்னர் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் மோகன் சொன்னார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

இதனிடையில் திரு. பிரபாகரனைச் சந்திக்க இந்திய அரசு அதிகாரிகளும் பாதுகாப்புப் படையினரும் எவருக்கும் அனுமதியளிக்க மறுத்து விட்டனர் என்று புதுடில்லிச் செய்தி ஒன்று தெரிவிப்பதாக வெரித்தாஸ் அறிவித்தது. (இ-எ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

### சித்த மருத்துவத்துறை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

### 1987/88 ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையின் பி. எஸ். எம். எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

(அ) 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.

(ஆ) 1985 ஆகஸ்ட் அல்லது 1986 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரேதடவையில சித்தியடைந்திருக்க வேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும் விண்ணப்பப் பத்திரமும் உதவிப் பதிவாளர் (தேர்வு) தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10/- செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ. மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு விலாசமிட்டு ரூபா 10க்கான காசுக்கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய கடைசித் திகதி:- 28 8-1987.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கோப்பாயில் இந்திய நிவாரணம்

கோப்பாய், ஜூலை 27
கோப்பாய் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு இந்திய நிவாரண உதவி அடுத்த வாரம் வழங்கப்படவுள்ளது. இது சம்பந்தமான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இடம் பெயர்ந்துவந்த வடமராட்சி மக்களுக்குரிய இந்திய நிவாரணங்கள் சென்ற வாரம் வழங்கப்பட்டன. (இ-ரி)

### வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ். கோட்டை இராணுவத்துடனான மோதலில் வீர மரணம் அடைந்த யோகனுக்கு (ஐ. யோகேந்திரன், புன்னாலைக்கட்டுவன்) தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். (இ)

### தலைவர்கள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பாட்டை நிராகரிக்கும் உரிமை எமக்கு உண்டு'— முன்னாள் அமைச்சர் சிறில் மத்தியூ;

இலங்கை அரசு இந்தியாவுக்கு அடிமையாகிவிட்டது.

பிலிப்பீன்ஸில் படிப்பிக்கப்பட்ட பாடத்தை நாம் மறந்து விடக்கூடாது.

நாடு தனி மனிதனின் சொத்தல்ல.

நாடு ஏற்கனவே விற்கப்பட்டுவிட்டது.

வடக்கு-கிழக்கு இணைப்பை நான் எதிர்க்கின்றேன்.

இதை எதிர்த்து கண்டிக்கு யாத்திரை போன அதே தலைவர் தான் இதனைக் கொண்டு வருகின்றார்.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்காரா:-

• உத்தேச தனிமாநில யோசனை நடைமுறைக்கு வரப்போவது இல்லை அப்படியானவொன்றைப் பற்றி ஏன் விமரிசனம் செய்ய வேண்டும். (இ-எ)

### இலங்கைத் தூதர் நம்பிக்கை

புதுடில்லி, ஜூலை 27
இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் வெற்றி அளிக்கும் என்று நம்புகின்றேன்.

இப்படி புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரத்தின தெரிவித்தார்.

கொழும்பு திரும்பும் வழியில் சென்னைவிமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்துவெளியிடுகையில் திரு. திலகரத்தின இதைத் தெரிவித்தார் (இ-எ)

### பிரதமரை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பிரதமர் சில ஆலோசனைகள், கருத்துக்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்தார்.

அவற்றைப் பரிசீலனை செய்ய ஜனாதிபதி ஒப்புக்கொண்டார். (இ-எ)

### புதிய---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் முகாமுக்குள் அரசுப் படைகள் வைக்கப்பட்டு இருக்கும் என்ற உறுதிமொழியை இலங்கை அரசு கௌரவிக்கும் என்பதை எப்படி நம்ப முடியும்?

இதை உறுதிசெய்யும் நிலையில் இந்தியா இருக்க முடியுமா?

இப்படி புலிகள் தரப்பில் இந்திய அரசு அதிகாரிகளுக்குக் கூறப்பட்டுள்ளது- இவ்வாறு கூல்றிஜ் தெரிவித்தார். (அ-எ)

### ஷெல்லுக்கு---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
களை வந்தடைந்தனர்.

அவர்கள் மீண்டும் நேற்று தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது காலை ஆறு மணியளவில் திடீரென்று ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போதே பிஸ்தாப வயோதிபர் கொல்லப்பட்டார்.

சரவணமுத்து இராசகிளி (வயது 35), சரவணமுத்து தயாபரன் (ஒன்றரை வயது) ஆகிய இருவர் உட்பட சு. ஜெயா, வி. தேவி, எஸ். குமார் ஆகியோர் காயமடைந்தனர்.

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் விழுந்த இருஷெல்களால்இரண்டு கடைக் கட்டடங்கள் சேதம் அடைந்தன.

பலர் அச்சுவேலியில் இருந்து பீதியால் வெளியேறினர்.

சனிக்கிழமை இரவு வளலாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் பின்பு இராணுவம் முகாமுக்குத் திரும்பிச் சென்றது. (இ-11)

# எல்லாமே நிலையற்றவை என்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஜூலை 27
எல்லாமே நிலையற்றவை!-

இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

கடந்தவியாழன் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் புதிய யோசனையை கைவிடும்படி அமைச்சர் காமினி ஜெயசூரியா, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இரண்டாவது முறையாக உருக்கமான வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் அப்போது சொன்னதாவது;

யு.என்.பியில் நான்புதிதாகச் சேர்ந்த போது நீங்களும் டட்லிசேனநாயக்காவும் சேர்ந்து வடக்கு-கிழக்கு இணைய வழி வகுக்கும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்ததை நான் அறிந்து கொண்டேன்.

பண்டா-செல்வா ஒப்பந்த அமுலாக்கப்பட்டால் நாடு இப்படித்தான் பிளவுபடும் என்று படம் கீறித் தூக்கிக் கொண்டு நாடு முழுவதும் சென்று நீங்கள் டட்லியுடன் சேர்ந்து பிரசாரம் செய்தீர்கள்.

அண்மைக் காலத்தில் கூட நீங்கள் இணைப்பைக் கடைசி வரை ஆதரிக்க மாட்டேன் என்று தெரிவித்து வந்தீர்கள்.

இதற்காகத்தானே இந்த யுத்தமே நடந்தது. இப்போது இணைப்பை ஆதரிக்கின்றீர்களே!

இப்படி அமைச்சர் ஜெயசூரியா ஜனாதிபதியைப் பார்த்துத் தெரிவித்தார்.

பதிலளித்த ஜனாதிபதி சொன்னதாவது;

உங்களுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்றேன்.

நிலையாமை பற்றி புத்தபெருமான் போதித்துள்ளார்.

பௌத்த தலைவன், அரசியல்வாதி என்ற முறையில் புத்தரின் போதனைகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

எல்லாமே நிலையற்றவைஎன்பதையும்தெரிந்து கொள்ளுங்கள்''- இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன அமைச்சர் ஜெயசூரியாவுக்கு தெரிவித்தார். (இ-எ)

## புதிய யோசனைகளை அப்படியே ஏற்க முடியாது

### புலிகள் பேச்சாளர் கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 27
இலங்கை அரசின் புதிய யோசனைகளை தற்போதைய அமைப்பில் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இப்படி பி. பி. சி. வானொலி நேற்று தனது மாலை செய்தியறிக்கையில் தெரிவித்தது.

இலங்கை அரசின் புதிய யோசனை தற்போதைய அமைப்பில் இருக்கும் வரை அதன் பங்காளராக நாம் முன்வரமுடியாது

எனினும் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்த நாம் தயாராக இருக்கின்றோம்.

இப்படிப் புலிகள் பேச்சாளர் தெரிவித்தார் என்று பி பி.சி. வானொலி மேலும் அறிவித்தது. (இ-எ)

### ராஜீவின் கொழும்பு விஜய நிகழ்ச்சி நிரல்

கொழும்பு, ஜூலை 27
பிரதமர் ராஜீவ்காந்தியின் உத்தேச கொழும்பு விஜயத்தின் நிகழ்ச்சி நிரல் வருமாறு:-

புதன்கிழமை பகல் விசேஷ விமானத்தில் கட்டுநாயக்காவில் வந்து இறங்குவார்.

அங்கிருந்து ஹெலிக்கொப்டரில் கோட்டே நாடாளுமன்றக் கட்டடத்தை வந்தடைவார்.

அங்கு அவருக்கு வரவேற்பளிக்கப்படும்.

அன்று இரவு ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது மாளிகையில் பிரதமர் காந்திக்கும் அவரின் மனைவி சோனியாவுக்கும் இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவிப்பார்.

அதற்கு முன் ஒப்பந்தம் ஒன்றில் இரு தலைவர்களும் கைச்சாத்திடுவார்கள்.

வியாழக்கிழமை காலை பிரதமர் காந்தி நாடு திரும்புவார்.

அதற்கு முன்னர் பிரதமர் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கூட்டாக செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்துவர். (இ-எ)

### பிரபா...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
விஜயம் உத்தேசிக்கப்பட்டபடி புதன்கிழமை இடம் பெறுவது கேள்விக்குறியாக உள்ளது.

இப்படி நள்ளிரவு பி பி.சி அறிவித்தது (இ-எ)

### உஷ்ணக் காற்று கிறீஸில் 700 பேர் மரணம்

ஏதென்ஸ், ஜூலை 27
கிரேக்க நாட்டில் உஷ்ணக் காற்று வீசியதால் எழுநூறுக்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

உஷ்ணம் 111 (F) பாகையாக இருந்ததால் மரணங்கள் சம்பவித்தன என்று கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (இ-எ)

### யோசனை 5 பக்கங்கள்!

கொழும்பு, ஜூலை 27
இந்தியத் தூதர் டிக்ஸிற் புதுடில்லிக்கு எடுத்துச்சென்ற இலங்கை அரசின் புதிய யோசனைகள் ஐந்து பக்க தஸ்தாவேஜு ஆகும்.

சகல தரப்பினரும் ஏற்றுக்கொண்டால் இத் தஸ்தாவேஜில்தான் இந்தியப் பிரதமரும் இலங்கை ஜனாதிபதியும் கைச்சாத்திடுவர். (இ-எ)

### மத்தியாஸ் மீது வழக்கு

மாஸ்கோ, ஜூலை 26
கிரெம்ளின் செஞ்சதுக்கத்துக்கு அருகில் கடந்த மே மாதத்தில் விமானத்தில் சென்று இறங்கிய 19 வயதான மத்தியாஸ் றஸ்ற் மீது சோவியத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட உள்ளது.

மேற்கு ஜேர்மனைச் சேர்ந்த மத்தியாஸ் இப்போது சோவியத் சிறையில் உள்ளார்.

### 4 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 27
மொறக்கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் நான்கு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

புலிஇயக்கப் போராளி ஒருவரை அதிரடிப்படையினர் கைதுசெய்ய முற்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலிலேயே நால்வரும் கொல்லப்பட்டனர். (இ)

### அமைச்சர் ஜெயசூரியா பதவி துறக்கலாம்

கொழும்பு, ஜூலை 27
உணவு, விவசாய அமைச்சர் காமினி ஜெயசூரியா அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யலாம்.

வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்தே அமைச்சர் பதவியை இவர் துறக்கஉள்ளார் என்று கூறப்படுகிறது.

### நேற்று மாலை வளலாயில் நடந்தமோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
நேற்று மாலை 6 மணியளவில் வளலாயில் சிப்பாய்களுடன் இடம்பெற்ற மோதலில் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த காந்தி (கார்த்திக் - கண்டி) வீரமரணம் அடைந்தார்.

புலிகள் இவருக்குத் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். (இ)

### தொடர்ந்து இருக்க உள்ள முகாம்கள்

கொழும்பு, ஜூலை 27
உத்தேச இலங்கை—இந்திய உடன்பாடு அமுலுக்குவந்த பின்னர் வடபகுதியில் தொடர்ந்து இருக்கப் போகும் இராணுவ முகாம்கள் விவரம் வருமாறு;

பலாலி,
ஆனையிறவு,
வல்வெட்டித்துறை,
தொண்டமானாறு,
குருநகர்.

வடமராட்சித் தாக்குதல் நடவடிக்கையின் பின்னர் நிறுவப்பட்ட சகல இராணுவ முகாம்களும் வாபஸ் வாங்கப்படும்

இப்படி சண்டே பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ)

### பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் ராஜீவ்

புதுடில்லி, ஜூலை 26
பொறுத்திருந்துபார்ப்போம்—


இப்படி பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இப்படித் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து நிறையச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து வருகின்றோம். பொறுத்து இருந்து பார்ப்போம்—

இப்படி பிரதமர் காந்தி தெரிவித்தார். (இ-எ)

### முதலாம் வருட நினைவு



மலர்வு 22-10-1928 ★ உதிர்வு 27-7-1986

**பேதுருப்பிள்ளை அல்பிறட்**
(பங்காளர், நவலங்கா ஸ்ரோஸ், நீர்கொழும்பு)

அன்புடனும் பாசத்துடனும் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எமது அருமை தலைவா! நீர் எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும் உமது நினைவு எம்மை விட்டு அகலாது. உமது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பெருமக்கள்,
சகோதரன், மருமகன்

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 27-07-1987.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road Jaffna on Monday July 27, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org